" විශිෂ්ඨ රාජ්‍ය සේවාවක් සඳහා ඇප කැපවෙමු "
ප්‍රධාන ලේකම් කාර්යාලය - බස්නාහිර පළාත
பிரதான செயலாளர் அலுவலகம் - மேல் மாகாணம்
OFFICE OF THE CHIEF SECRETARY - WESTERN PROVINCE
204, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
204, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.
ප්‍රධාන ලේකම් / பிரதான செயலாளர் / Chief Secretary
දුරකථන / தொலைபேசி / Telephone - 011 - 2092599
ෆැක්ස් / பெக்ஸ் / Fax - 011 - 2092601
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail - chiefsecretary@wpc.gov.lk
පොදු දුරකථන / தொலைபேசி இலக்கம் / General Telephone - 011 - 2093000
SLSI ISO 9001 SYSTEM CERTIFIED
SLAB ACCREDITED ISO/IEC: 17021 QMS-001-01

මගේ අංකය / எனது இலக்கம் / My No. CSWP/ADM/18-38/FI/01-2019 ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No. දිනය / திகதி / Date 2019/03/06

ஆளுநர் செயலாளர் (மே.மா.),
செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.),
சபைச் செயலாளர் (மே.மா.),
அனைத்து அமைச்சுக்களதும் செயலாளர்கள் (மே.மா.),
பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்/ ஆளணி மற்றும் பயிற்சி/ நிதி/ திட்டமிடல்/ பொறியியல்),
மாகாண வருமான ஆணையாளர் (மே.மா.),
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (மே.மா.),
நிர்வாக அலுவலர் (நிர்வாகம்)
பிரதான செயலாளரின் இணைப்புச் செயலாளர்,

**அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 21/2018, 24/2018, 31/2001(XIV), 27/2018 மற்றும் 19/2019 அரச நிர்வாக சுற்றறிக்கைக் கடிதம் 02/2018 ஆகியவற்றை மேல் மாகாணத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளல்.**

அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளை மேல் மாகாணத்திற்கு உரியதாக்கிக் கொள்வதற்கு கௌரவ ஆளுநர் அங்கீகாரம் அளித்துள்ளதாக ஆளுநர் செயலாளரின் இலக்கம் GOS/ADM/02/19/02/2019 மற்றும் 2019.02.13 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அச்சுற்றறிக்கைகளின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

| தொடரிலக்கம் | சுற்றறிக்கை இலக்கம் மற்றும் திகதி | விடயம் |
|---|---|---|
| 01. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 21/2018, 2018-09-28 | இலங்கை பொறியில் சேவையின் III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களை இரண்டாம் மொழித்தேர்ச்சி பரீட்சையில் சித்தியடைவதிலிருந்து விடுவித்தல் |
| 02. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 24/2018, 2018-09-07 | சம்பளம் பொருள்கொள்ளல் |
| 03. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 31/2001 (XIV), 2018-12-14 | தாபனக் கோவை பகுதி II இன் XLVIII அத்தியாயத்தின் 19.5 ஆம் உபபிரிவின் கீழ் ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களது பெயர்ப்பட்டியல் |
| 04. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 27/2018, 2018-12-31 | தாபனக் கோவையின் XII அத்தியாயத்தின் 16 ஆம் பிரிவினை திருத்துதல் |
| 05. | அரச நிர்வாக சுற்றறிக்கை கடிதம் இலக்கம் 02/2018, 2018-11-28 | களப்பதவி வகைக்குரிய அரச மற்றும் மாகாண அரச சேவை பதவிகள் |

02. அச்சுற்றறிக்கையின்படி செயற்படுமாறும் உங்களின் கீழுள்ள அனைத்து திணைக்களப் பிரதானிகளுக்கும், தாபனப் பிரதானிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே.என்.சூரியாரச்சி,
உதவிப்பிரதான செயலாளர் (நிர்வாகம்),
பிரதான செயலாளருக்காக (மே.மா.)

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 21/2018

எனது இலக்கம் : ES/1/ சுற்றறிக்கை
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.09.28

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபை பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களை இரண்டாம் அரசகரும மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்து விடுவித்தல்

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2007 ஆனது வலுவிலிருக்கும் திகதி முதல் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களை மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதால், 2007.07.01 ஆந் திகதி முதல் 2012.05.15 ஆந் திகதி வரை இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களை அவர்களின் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் தடைதாண்டலுக்கு உரித்தான இரண்டாம் மொழியின் வாய் மூலப் பரீட்சையினைப் பூர்த்தி செய்வதன் அவசியப்பாட்டில் இருந்து விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டள்ளது.

**02.** ஏற்கனவே 2007.07.01 ஆந் திகதிக்குப் பின்னர் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள, நியமனக் கடிதத்தில் குறித்துறைக்கப்பட்டுள்ள இரண்டாம் அரசகரும மொழி வாய்மூலத் தேர்ச்சியினை உரிய திகதிக்கு பூர்த்தி செய்யாததன் காரணமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதியின் III ஆம் பிரிவின் கீழ் நன்னடத்தைக் காலத்தினை நீடித்து நியமனம் நிரந்தப்படுத்தப்பட்ட அலுவலர்களாயின், அந்நன்னடத்தைக் காலத்தினை திருத்தியமைப்பதற்கான கோரிக்கையினை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக இவ் அமைச்சுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

**03.** அவ்வாறே சேவைப் பிரமாணத்தின் இடைக்கால ஏற்பாடுகளுக்கு ஏற்ப பதவியுயர்வினைப் பெறுவதற்கு தகைமை பெறும் 2007.07.01 ஆந் திகதிக்குப் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க **அல்லது** அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2007 மற்றும் இடைநேர் வளைவுச் சுற்றறிக்கைக்கு உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க மற்றைய அரசகரும மொழித் தேவையினை, உரிய பதவியுயர்வினைப் பெற்றுக்கொள்வதற்காக பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

04. இச் சுற்றறிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உடன்பாட்டுடன் பிரசுரிக்கப்படுகின்றது.

பத்மசிரி ஜயமான்ன
செயலாளர்
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு